**புதுச்சேரி அரசு**
**பள்ளிக் கல்வி இயக்ககம்**

புதுச்சேரி, 07-02-2016

**<u>செய்திக் குறிப்பு</u>**

நடைபெறவுள்ள மார்ச் - 2017, மேல்நிலைத் துணைத் தேர்விற்கு தேர்வெழுத தேர்வுத் துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களுக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்கத் தவறி, தற்போது விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்களிடமிருந்து சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் (Takkal) மூலம் ஆன்-லைனில் (Online) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தனித் தேர்வர்கள் ஆன்-லைனில் விண்ணப்பிப்பதற்காக ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் முகவரியில் இயங்கும் சிறப்பு சேவை மையங்களுக்கு **09-02-2017 (வியாழக்கிழமை) மற்றும் 10-02-2017 (வெள்ளிக்கிழமை)** ஆகிய **இரண்டு நாட்கள்** மட்டும் **காலை 9.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை** விண்ணப்பதாரர் உரிய ஆவணங்களுடன் நேரில் வந்து ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் அனைத்து தனித் தேர்வர்களுக்கும் திருநெல்வேலி, மதுரை, கோவை, திருச்சி, கடலூர், வேலூர் மற்றும் சென்னை ஆகிய தலைமை இடங்களில் மட்டுமே தேர்வு மையம் அமைக்கப்படும்.**

தனித்தேர்வர்கள் தனியார் கணினி மையம் (Private Browsing Centre) மூலம் விண்ணப்பிக்க இயலாது. இம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சேவை மையத்தின் மூலம் மட்டுமே ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**<u>புதுச்சேரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான சேவை மையங்கள்</u>**

1. **ஆண் தனித்தேர்வர்களுக்கான சேவை மையம்:**
   வை.வெங்கடசுப்பா ரெட்டியார் அரசு தொழில்நுட்ப மேனிலைப் பள்ளி, இலாசுப்பேட்டை. (தொ.பே.எண் - 0413 – 2253244)

2. **பெண் தனித்தேர்வர்களுக்கான சேவை மையம்:**
   மேல்நிலைக் கல்வி தேர்வுப் பிரிவு, நான்காம் தளம், பள்ளிக் கல்வி இயக்ககம், அண்ணா நகர், புதுச்சேரி – 5 (தொ.பே.எண் - 0413 – 2207269)

**விண்ணப்பிக்க விரும்புவோர்:-**

❖ மறுமுறை தேர்வெழுதுவோர் **(H வகை தனித்தேர்வர்கள்)**
(ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50 தேர்வுக் கட்டணமும், இதர கட்டணம் ரூ.35 ம் பணமாக செலுத்த வேண்டும்)

❖ நேரடித் தனித்தேர்வர்கள் **(HP வகை தனித்தேர்வர்கள்)**
(அனைத்துப் பாடங்களுக்கும் சேர்த்து ரூ.150 தேர்வுக் கட்டணமும், இதர கட்டணம் ரூ.35 மற்றும் கேட்டல்/பேசுதல் திறன் தேர்வு கட்டணம் ரூ. 2/- ம் மொத்தம் ரூ.187 பணமாக செலுத்த வேண்டும்)

தேர்வுக் கட்டணத்துடன் கூடுதலாத சிறப்பு அனுமதி கட்டணமாக ரூ. 1000/- மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ. 50/- பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

**(ஜெ. கிருஷ்ணராஜு)**
**இணை இயக்குநர்**

இந்த செய்தியினை தங்களது நாளிதழ் / தொலைக்காட்சியில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**(ஜெ. கிருஷ்ணராஜு)**
**இணை இயக்குநர்**